2018 ஜூன் 26]

இடத்தை அடையாளப்படுத்திக் காட்டினாலும், அந்த இடத்திலும் உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 2011 ஆம் ஆண்டு வரை 311 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மட்டும்தான் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தன. ஆனால், கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் 325 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கு ஆணையிட்ட அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. செள. தங்கப்பாண்டியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

217—

கால்நடை மருத்துவமனை

***12715—திரு. செள. தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதி, தெற்கு வெங்காநல்லூர் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தெற்கு வெங்காநல்லூர் கிராமத்தில் 3,586 கால்நடை அலகுகள் உள்ளபடியால், அரசாணை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2018–ன்படி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய தெற்கு வெங்காநல்லூர் கிராமத்தில்

கால்நடைக் கிளை நிலையம் ரூ.2 இலட்சத்து 97 ஆயிரம் செலவில் 31–3–2018 அன்று புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று வேண்டியுள்ளார்கள். கால்நடை மருத்துவமனையை நேரடியாக அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதியில் உள்ள மிகப் பெரிய ஊராட்சி தெற்கு வெங்காநல்லூர் ஊராட்சியாகும். இவ்வூராட்சியில் செம்பலாபுரம், பட்டியூர் போன்ற சுமார் 25 கிராமங்கள் உள்ளன. இக்கிராமத்தில் ஏழையெளிய மக்கள் ஆடு, மாடு, கோழிகளை வளர்த்து, தங்களின் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர்
(திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி ஒரு கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட சில விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. கால்நடை மருத்துவமனையை நேரடியாகத் துவக்க இயலாது. அதேபோல், கால்நடைக் கிளை நிலையம் முதலில் துவக்கப்பட்டு, அதற்குப் பிறகு கால்நடை மருந்தகமாக அது தரம்

2018 ஜுன் 26]

உயர்த்தப்பட வேண்டும். அப்படி கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதியிலே 5,000–க்கும் மேற்பட்ட கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, அருகிலுள்ள கால்நடை நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்பது போன்ற விதிகள் இருக்கின்ற காரணத்தினாலே, ஒரு கால்நடைக் கிளை நிலையம் துவக்கப்பட்டு, அதன் பிறகு அது மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும். அதன் பிறகுதான் அது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், தினந்தோறும் அந்தப் பகுதியிலே வருகின்ற கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் மேல் இருத்தல் வேண்டும். அதேபோல, உள் நோயாளி பிரிவு, ஊடுகதிர் கருவி நிறுவுதல் போன்ற வசதிகளை உருவாக்குவதற்கு போதிய இட வசதி வேண்டுமென்பதையும் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. செள. தங்கப்பாண்டியன் அவர்கள்.*

திரு. செள. தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உலக அளவிலே 350–க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நாய் இனங்கள் உள்ளன. அவற்றில் இந்தியாவிலே 7 நாய் இனங்கள் உள்ளன. அவற்றில் தமிழ்நாட்டில் 4 நாய் இனங்கள் உள்ளன. அவை, சிப்பிப்பாறை, கண்ணி, கோம்பை, ராஜபாளையம் ஆகும். அவற்றில் ராஜபாளையம் நாய் இனம் சிறப்பு வாய்ந்தது. மேலும், ராஜபாளையம் நாய் இனத்திற்கு 2005–ல் இந்திய அரசு சார்பில் தபால் தலை வெளியிடப்பட்டது. இத்தகைய சிறப்புவாய்ந்த ராஜபாளையம் நாய் இனத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று, வெளி மாநிலத்திலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாவட்டங்களிலிருந்தும் அனைவரும் ராஜபாளையத்திற்கு வருகை தருகின்றனர். ஆகையால், ராஜபாளையத்தில் அருங்காட்சியகம் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மனிதர்களுக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றனவோ அதேபோன்று நாய்களுக்கும் என்னென்ன தேவை என்றெல்லாம் அறிந்துதான் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்களை கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த 4 நாய் இனங்கள், அதுவும் ராஜபாளையம் பகுதி, விருதுநகர் மாவட்டத்தில் இருக்கின்ற காரணத்தினாலே கண்டிப்பாக அந்த நாய்களையெல்லாம் காப்பாற்றும் வகையிலே, அந்த நாய்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதலமைச்சரோடு ஆலோசனை மேற்கொண்டு, அவற்றின் உற்பத்தியைப் பெருக்க, அதனுடைய தொன்மையைக் காக்க வேண்டுமென்பதற்காக கூடியவிரைவிலே அதற்கான அறிவிப்பு வரவிருக்கிறதென்கின்ற நல்ல செய்தியையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன். எனது தொகுதியான மயிலாடுதுறையில் உள்ள குத்தாலம் ஒன்றியம், வானாதிராஜபுரம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடைக் கிளை நிலையம் புதியதாகத் தோற்றுவிக்க வேண்டுமென்று சொன்னால் அரசு விதிகளின்படி 3,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் அங்கு இருக்க வேண்டும். அதேபோல, அருகிலுள்ள கிளை நிலையம்

2018 ஜூன் 26]

அல்லது கால்நடை நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டருக்கும்மேல் இருத்தல் வேண்டும். அப்படி கால்நடைக் கிளை நிலையம் செயல்படுவதற்கு வாடகை இல்லா கட்டடம் பொது மக்களால் அளிக்கப்பட வேண்டும். அத்தனையும் விதிமுறைகளின்படி அங்கு இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் வடவூர் போன்ற கிராமங்களில் அதிக கால்நடைகளை வளர்த்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே கால்நடை மருத்துவமனையோ அல்லது கால்நடைக் கிளை நிலையங்களோ ஏதுமில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வடவூர் கிராமப் பகுதியிலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி ஒரு கால்நடைக் கிளை நிலையம் புதிதாகத் தோற்றுவிப்பதற்கு பல்வேறு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதிக்கு துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, தேவைப்படுமாயின் நிதிநிலைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்கள் நாங்குநேரி தொகுதியில், சங்கணாம்புலம் ஊராட்சி, சிவந்தியாபுரத்தில் 3,000–லிருந்து 5,000 கால்நடைகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சிவந்தியாபுரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாகவே கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று சொல்கின்றார்கள். விதியிலே இடம் இல்லாத காரணத்தினால், முதலிலே கால்நடைக் கிளை நிலையம் தோற்றுவிக்கப்படும். அதன் பிறகுதான் கால்நடை மருந்தகம், அதன் பிறகு கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். ஆகவே, முதலில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு 3 ஆயிரம் அலகுகள் வேண்டும். அங்கு 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். உடனடியாக அந்தப் பகுதிக்கு துறை அதிகாரிகளை அனுப்பி வைத்து, ஆய்வு செய்து அரசினுடைய விதிமுறைகளுக்கேற்ப அங்கே கால்நடைகளின் எண்ணிக்கை இருக்குமேயானால், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதி, ஜாரதான்கொல்லை, பாலாம்பட்டு, பீஞ்சமந்தை போன்ற மிகப் பெரிய மலைக் கிராமங்களை உள்ளடக்கியது. சற்றேறக்குறைய 20,000 மக்கள்தொகை கொண்ட அந்தக் கிராமத்தில், 15,000 கால்நடைகள் மலையிலே இருக்கின்றன. மனிதனுக்கு*

2018 ஜூன் 26]

ஒரு பிரச்சினை என்றால், கீழே ஒடுகத்தூர் வர வேண்டும். அங்கே இருக்கக்கூடிய அந்த விலங்குகளுக்கு ஒரு பிரச்சினை என்றால், எங்கே செல்வது என்று தெரியவில்லை. ஆகவே, இந்த அரசு கால்நடைகளுக்கு, அந்த மலைக் கிராமங்களில் ஒரு மருத்துவமனையை அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதிக்கு உடனடியாக கால்நடை பராமரிப்புத் துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, தேவைப்படுமாயின், நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, கால்நடை மருத்துவமனை அமைப்பதற்குண்டான பணிகளை மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நல்லாட்சி தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு காவல் துறை மானியக் கோரிக்கையை தாக்கல் செய்ய இருக்கிறார். அவருக்கு எங்களின் சார்பில் நெஞ்சார்ந்த வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதிக்குட்பட்டிருக்கின்ற பெத்தாம்பாளையம் பேரூராட்சிப் பகுதிகளில் கால்நடைகளினுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கிருக்கின்ற கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்துவதற்கு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி ஒரு கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால், தினமும் சிகிச்சைக்கு வருகின்ற கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும்மேல் இருத்தல் வேண்டும். அதேபோல உள் நோயாளி பிரிவு, ஊடுகதிர் பிரிவு, கருவி நிறுவுதல் போன்ற வசதிகளை உருவாக்குவதற்கு போதுமான இட வசதிகள் இருத்தல் வேண்டும். அப்படியிருக்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு துறை அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

ஆரம்ப சுகாதார நிலையம்

***20193—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், சித்தாற்காடு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*